DINAMALAR

17 FEB 2023

PAGE 4

# பல்கலை துணைவேந்தருக்கு சிறந்த தலைமைக்கான விருது

**புதுச்சேரி, பிப். 17–**

புதுச்சேரி பல்கலையில் நடந்த சர்வதேச மாநாட்டில், துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு, சிறந்த தலைமைக்கான விருது வழங்கப்பட்டது.

'தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல்' என்ற தலைப்பில் 3 நாள் சர்வதேச மாநாடு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்தது. இந்த மாநாட்டை, பல்கலைக்கழகஉயிர்தகவலியல்துறை, இந்திய அறிவியல் காங்கிரஸ் சங்கம், தாவர ஆராய்ச்சிக்கான அமைப்பு, புதுச்சேரி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில், மத்திய உயிர்தொழில்நுட்பவியல் துறை ஆகியவை இணைந்து நடத்தின.



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடந்த சர்வதேச மாநாட்டில், துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு சிறந்த தலைமைக்கான விருது வழங்கப்பட்டது.

மாநாட்டில், இந்திய அறிவியல் காங்கிரஸ் சங்கத்தின் தலைவர் விஜய் லட்சுமி சக்சேனா துவக்க உரையாற்றினார். முன்னாள் தலைவர் அசோக்குமார் சக்சேனா, மாநாட்டு மலரை வெளியிட்டார். தாவர ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் ஹன்ஜினால், பிர்லா குளோபல் பல்கலைக்கழக துணைவேந்தர் மாத்துார் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

தாவர ஆராய்ச்சி அமைப்பின் செயலாளர் ஜெனரல் பட்னாகர் சிறப்புரையாற்றினார். விழாவில் புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு 'சிறந்த தலைமைக்கான விருது–2023' வழங்கப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக் கழக இயக்குனர் தரணிக்கரசு தலைமை தாங்கி, மருத்துவ புத்தகத்தை வெளியிட்டார். வாழ்க்கை அறிவியல் பள்ளியின் டீன் பிரதாப்குமார் ஷெட்டி, உயிர்தகவலியல் துறை தலைவர் லட்சுமி உரையாற்றினர். முன்னதாக, பேராசிரியர் தினகர ராவ் வரவேற்றார். இந்திய அறிவியல் காங்கிரஸ் சங்கத்தின் புதுச்சேரி கன்வீனர் சுந்தரமோகன் நன்றி கூறினார்.

மாநாட்டில் நாடு முழுவதும் இருந்து விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

THE HINDU

17 FEB 2023

PAGE 3

INBRIEF

## Vice President to attend convocation on February 28

Vice President Jagdeep Dhankhar will be the chief guest at the 29th convocation ceremony of Pondicherry Central University scheduled to be held on February 28. A press note from the varsity said the Vice President, who had consented to participate in the event and deliver the convocation address, would inaugurate four new academic buildings on the occasion. In all, 237 candidates will be conferred with Ph.D. degrees and 189 gold medals will be awarded to toppers in various disciplines. During the convocation, a total of 31,857 candidates would be conferred with their degrees in various disciplines, the University said.

DINA THANTHI

17 FEB 2023

PAGE 5

# புதுச்சேரிக்கு 28-ந்தேதி துணை ஜனாதிபதி வருகை

## பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கிறார்

புதுச்சேரி, பிப்.17-
புதுவை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் 28-ந்தேதி வருகிறார்.

### பட்டமளிப்பு விழா

புதுவை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா வருகிற 28-ந்தேதி நடக்கிறது. டாக்டர் அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் உள்ள ஜவகர்லால் நேரு அரங்கில் இந்த பட்டமளிப்பு விழா நடக்கிறது.

விழாவில் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார். அப்போது பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4 புதிய கட்டிடங்களை திறந்துவைத்து பட்டங்களை வழங்குகிறார்.

### தங்கப்பதக்கம்

விழாவில் 21 ஆயிரத்து 208 புதுவை பல்கலைக்கழக மற்றும் இணைப்பு கல்லூரி மாணவர்கள், 10 ஆயிரத்து 649 தொலைதூர கல்வி மாணவர்கள் என 31 ஆயிரத்து 857 மாணவர்கள் பட்டங்களை பெறுகிறார்கள்.

இதில் 242 ஆராய்ச்சி மாணவர்களும் பல்வேறு பட்டப்பிரிவுகளில் முதலிடம் பிடித்து தங்கப்பதக்கங்கள் பெற உள்ள 187 மாணவர்களும் அடங்குவார்கள். பட்டமளிப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக நிர்வாகம் செய்து வருகிறது. துணை ஜனாதிபதியாக பதவியேற்றபின் முதல் முறையாக ஜெகதீப் தன்கர் புதுவை வருவதையொட்டி அரசு சார்பிலான நிகழ்ச்சிகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

DINAMALAR

17 FEB 2023

PAGE 2

# புதுச்சேரி பல்கலையில் 28ம் தேதி பட்டமளிப்பு விழா

**புதுச்சேரி, பிப். 17–** புதுச்சேரி பல்கலையில் வரும் 28ம் தேதி நடைபெற உள்ள 29 வது பட்டமளிப்பு விழாவில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் பங்கேற்று 31,857 மணவர்களுக்கு பட்டம் வழங்குகிறார்.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் செய்திக்குறிப்பு:

புதுச்சேரி பல்கலையின் 29வது பட்டமளிப்பு விழா, வரும் 28ம் தேதி, பல்கலை வளாகத்தில் உள்ள அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில், ஜவஹர்லால் நேரு அரங்கில் நடக்கிறது.

விழாவில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் 242 ஆராய்ச்சி மாணவர்கள் உள்பட 31,857 பேருக்கு பட்டம் வழங்கி பேசுகிறார். பின்னர், நான்கு புதிய கட்டடங்களை திறந்து வைக்கின்றார்.

DINAKARAN

17 FEB 2023

PAGE 14

தினகரன் புதுவை

# புதுவை பல்கலைக்கழகத்தில் பிப்.28ல் பட்டமளிப்பு விழா

## துணை ஜனாதிபதி பங்கேற்பு

புதுச்சேரி, பிப். 17: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 29வது பட்டமளிப்பு விழா வரும் 28ம் தேதி அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு அரங்கத்தில் நடக்கிறது. இதில் சிறப்பு விருந்திரனாக துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கவும், பட்டமளிப்பு உரையை நிகழ்த்தவும், நான்கு புதிய கல்வி கட்டிடங்களை திறந்து வைக்கவும் இசைந்துள்ளார்.

இந்த 29வது பட்டமளிப்பு விழாவின் போது, 21,208 புதுவை பல்கலைக்கழக மற்றும் இணைப்பு கல்லூரி மாணவர்கள் மற்றும் 10,649 தொலைதூர கல்வி மாணவர்கள் என மொத்தம் 31,857 மாணவர்கள் பட்டங்களை பெறவுள்ளனர். அதில் 242 ஆராய்ச்சி மாணவர்களும், பல்வேறு முதுகலை மற்றும் இளங்கலை பட்ட பிரிவுகளில் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கங்கள் பெறவுள்ள 187 மாணவர்களும் அடங்குவார்கள்.

29வது பட்டமளிப்பு விழாவிற்கு சிறப்பு ஏற்பாடுகளையும், மாணவர்களின் வாழ்க்கையின் சிறப்பான நாளினை மிகவும் மதிப்புமிக்கதாக கொண்டாட தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் பல்கலைக்கழகம் செய்து வருகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE HINDU TAMIL

17 FEB 2023

PAGE 3

CHENNAI
வெள்ளி, பிப்ரவரி 17, 2023 3 இந்து தமிழ் திசை

# புதுச்சேரி மத்திய பல்கலை.யில் வரும் 28-ல் பட்டமளிப்பு விழா

## குடியரசு துணைத்தலைவர் பங்கேற்பு

● புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் 29–வது பட்டமளிப்பு விழா வரும் 28–ம் தேதி நடக்கிறது. இந்த பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத்தலைவர் ஜெகதீப் தன்கர் பங்கேற்று, பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு உரையாற்றுகிறார். மேலும், பல்கலைக்கழக வளாகத்தில் நான்கு புதிய கட்டிடங்களையும் குடியரசு துணைத் தலைவர் திறந்து வைக்கிறார்.

இவ்விழாவில் புதுச்சேரி பல்கலைக்கழக மற்றும் இணைப்பு கல்லூரி மாணவ, மாணவிகள் 21,208 பேர்,10,649 தொலைதூர கல்வி மாணவ, மாணவிகள் என மொத்தம் 31,857 பேர் பட்டங்களை பெற உள்ளனர். அதேபோல் 242 ஆராய்ச்சி மாணவர்கள், பட்ட மற்றும் பட்ட மேற்படிப்புகளில் முதலிடம் பிடித்து 187 பேர் தங்கப்பதக்கங்களை பெற உள்ளனர் என்று பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

THE HINDU

17 FEB 2023

PAGE 3

# Four top prizes for Pondicherry University at fest



Students taking a look at the exhibits at the Farm Fest-2023 on AFT grounds in Puducherry. S.S. KUMAR

**The Hindu Bureau**
PUDUCHERRY

Pondicherry University has won four top prizes for its ornamental gardening among institutions and a second prize for its pot culture in the competition held in the recently-concluded 33rd FARM FEST-2023 organised by Department of Agriculture and Farmer Welfare.

Chief Minister N. Rangasamy presented the prizes to winners in various categories at the valedictory of the event.

The University had also participated in the two-day exhibition of flowers, vegetables and fruits that was held at AFT Grounds as part of the festival, a press release said.

DINAMANI

17 FEB 2023

PAGE 2

# புதுச்சேரி பல்கலை. பேராசிரியர் குழுவின் கண்டுபிடிப்புக்கு சர்வதேச அங்கீகாரம்

**புதுச்சேரி**, பிப்.16: புதுச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் குழுவின் புதிய வகை மின் ஆற்றல் சேமிப்பு பேட்டரியை உருவாக்கும் கண்டுபிடிப்புக் கட்டுரையை சர்வதேச ஆய்வு இதழ் வெளியிட்டு சர்வதேச அங்கீகாரம் அளித்தது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத் துறையில் காகிதத் தேநீர் கோப்பைகளைக் கொண்டு வேதியியல் செயலாக்கம் மூலம் மின் ஆற்றல் சேமிப்பு பேட்டரியை உருவாக்கியுள்ளனர். துறையின் பேராசிரியர் பெ.ஏழுமலை தலைமையில், ஆராய்ச்சியாளர் சங்கர்தேவி உயர் சக்தி கொண்ட மின்முனையை உருவாக்கி, அதனடிப்படையில் லித்தியம், ஆக்ஸிஜன் பேட்டரியை தயாரித்து, சோதனையிலும் வெற்றி பெற்றார்.

தற்போதைய பேட்டரிகளை விட பல மடங்கு ஆற்றலுடைய இந்தப் பேட்டரி மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும். ஆரோவில் குளோப் அடிப்படையில் இதன் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய பேட்டரி கண்டுபிடிப்பு குறித்த கட்டுரை லண்டனிலிருந்து வெளிவரும் ராயல் வேதியியல் அமைப்பின் பன்னாட்டு (நியூ ஜர்னல் ஆஃப் கெமிஸ்ட்ரி) இதழின் அட்டையில் இடம் பெற்றுள்ளது. பெருமைப்படத்தக்க வகையில் புதிய கண்டுபிடிப்புக் கட்டுரை அங்கீகாரம் பெற்றதற்காக துறைத் தலைவர் அருண் பிரசாத், பேராசிரியர் பெ.ஏழுமலை, ஆராய்ச்சியாளர் சங்கர்தேவி ஆகியோரை புதுச்சேரி பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத்சிங் நேரில் அழைத்துப் பாராட்டினார்.

**காப்புரிமை கோரி அறிக்கை:** புதுச்சேரி பல்கலைக்கழக பசுமை ஆற்றல் தொழில்நுட்பத் துறையில் எரிசக்தி சேமிப்பு மின்முனை புதிய சாதனங்களை உருவாக்கி, அதற்கான காப்புரிமை கோரி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலும், லித்தியம், ஆக்ஸிஜன் பேட்டரிகள், சோடியம், ஆக்ஸிஜன் பேட்டரிகளைத் தயாரிக்கவும் மத்திய அரசின் அறிவியல், தொழில்நுட்பத் துறையின் நிதியையும் பெற்றுள்ளனர். பேட்டரி உற்பத்திக்கான சாதனங்களும் பல்கலைக்கழக பசுமை ஆற்றல் துறையில் அமைக்கப்பட்டுள்ளன.

THE HINDU

17 FEB 2023

PAGE 3

# Four top prizes for Pondicherry University at fest



Students taking a look at the exhibits at the Farm Fest-2023 on AFT grounds in Puducherry. S.S. KUMAR

**The Hindu Bureau**
PUDUCHERRY

Pondicherry University has won four top prizes for its ornamental gardening among institutions and a second prize for its pot culture in the competition held in the recently-concluded 33rd FARM FEST-2023 organised by Department of Agriculture and Farmer Welfare.

Chief Minister N. Rangasamy presented the prizes to winners in various categories at the valedictory of the event.

The University had also participated in the two-day exhibition of flowers, vegetables and fruits that was held at AFT Grounds as part of the festival, a press release said.

THE HINDU TAMIL

17 FEB 2023

PAGE 4

மத்திய பல்கலை. பேராசிரியர் குழுவினரால்

# லித்தியம் - ஆக்சிஜன் பேட்டரி தயாரிப்பு

● புதுச்சேரி

புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் ஏழுமலை தலைமையில் ஆராய்ச்சியாளர் சங்கர்தேவி, லித்தியம்- ஆக்சிஜன் பேட்டரியை எளிய முறையில் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

அதன்படி, பயன்படுத்தப்பட்ட பேப்பர் டீ கப்களில் எளிய வேதியியல் செயலாக்கம் மூலம் செலினியம் கலந்த மெசோ போரஸ் கார்பன் மின் முனையை உருவாக்கினார். இந்த எலக்ட்ரோடு மூலம் ஆற்றல் திறன் கொண்ட லித்தியம் - ஆக்சிஜன் பேட்டரியை ஏழுமலை குழுவினர் உருவாக்கினர். இந்த ஆய்வுக்கட்டுரை, லண்டனில் வெளிவரும் ராயல் வேதியியல் சொசைட்டியின் சர்வதேச இதழ் அட்டைபடமாக வெளியிடப்பட்டுள்ளது.

வழக்கமான லித்தியம் அயன் பேட்டரிகளை விட லித்தியம் ஆக்சிஜன் பேட்டரிகள் 10 மடங்கு அதிக ஆற்றல் கொண்டது.

பேராசிரியர் ஏழுமலை தலைமையிலான குழுவினர் 6 வகையிலான எரிசக்தி சேமிப்பு எலக்ட்ரோடு சாதனங்களுக்கு இந்திய காப்புரிமை பெற விண்ணப்பித்துள்ளனர்.

பேராசிரியர் ஏழுமலை மற்றும் குழுவினரை பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத்சிங் வாழ்த்தினார். பசுமை ஆற்றல் துறை தலைவர் அருண்பிரசாத் உடனிருந்தார்.

MAALAI MALAR

PAGE NO : 3

DATE : 17.02.2023

# புதுவை பல்கலைக்கழக துணைவேந்தருக்கு விருது

புதுச்சேரி, பிப்.17—

புதுவை பல்கலைக்கழகத்தில் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் என்ற தலைப்பில் 2 நாள் சர்வதேச மாநாடு நடந்தது.

மாநாட்டை பல்கலைக்கழக உயிர் தகவலியல் துறை, இந்திய அறிவியில் காங்கிரஸ் சங்கம், தாவர ஆராய்ச்சிக்கான அமைப்பு, அறிவியல் தொழில்நுட்ப கவுன்சில், மத்திய உயிர்தொழில்நுட்பவியல் துறை இணைந்து நடத்தியது. அறிவியல் காங்கிரஸ் சங்க த லைவர் விஜயலட்சுமி சக்சேனா தொடக்க உரையாற்றினார். முன்னாள் தலைவர் அசோக்குமார் சக்சேனா மாநாடு மலர் வெளியிட்டார். தாவர ஆராய்ச்சி அமைப்பின் தலைவர் ஹன்ஜினால், பிர்லா பல்கலைக்கழக துணைவேந்தர் மாத்தூர் சிறப்பு விருந்தின்ர்களாக பங்கேற்றனர். தாவர ஆராய்ச்சி அமைப்பின் செயலாளர் ஜெனரல் பட்னாகர் சிறப்புரையாற்றினார்.

விழாவில் புதுவை பல்லைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங்கிற்கு சிறந்த தலைமைக்கான விருது வழங்கப்பட்டது. புதுவை பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு மருத்துவ புத்தகம் வெளி யிட்டார். டீன் பிரதாப்குமார்ஷெட்டி, உயிர் தகவலியல் துறை தலைவர் லட்சுமி உரையாற்றினர். தினகர ராவ் வரவேற்றார். அறிவியல் காங்கிரஸ் கன்வீனர் சுந்தரமேகன் நன்றி கூறினார். மாநாட்டில் நாடு முழுவதும் பல்வேறு விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.

TAMIL MURASU

PAGE NO : 07 DATE : 17.02.2023

புதுவை பல்கலை.யில்

# பிப்.28ல் பட்டமளிப்பு விழா துணை ஜனாதிபதி பங்கேற்பு

புதுச்சேரி, பிப். 17-

புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 29வது பட்டமளிப்பு விழா வரும் 28ம் தேதி அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் உள்ள ஜவஹர் லால் நேரு அரங்கத்தில் நடக்கிறது. இதில் சிறப்பு விருந்திரனாக துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கவும், பட்டமளிப்பு உரையை நிகழ்த்தவும், 4 புதிய கல்வி கட்டிடங்களை திறந்து வைக்கவும் இசைந்துள்ளார். இந்த 29வது பட்டமளிப்பு விழாவின் போது, 21,208 புதுவை பல்கலைக்கழக மற்றும் இணைப்பு கல்லூரி மாணவர்கள் மற்றும் 10,649 தொலைதூர கல்வி மாணவர்கள் என மொத்தம் 31,857 மாணவர்கள் பட்டங்களை பெறவுள்ளனர்.

அதில் 242 ஆராய்ச்சி மாணவர்களும், பல்வேறு முதுகலை மற்றும் இளங்கலை பட்ட பிரிவுகளில் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கங்கள் பெறவுள்ள 187 மாணவர்களும் அடங்குவார்கள்.

29வது பட்டமளிப்பு விழாவிற்கு சிறப்பு ஏற்பாடுகளையும், மாணவர்களின் வாழ்க்கையின் சிறப்பான நாளினை மிகவும் மதிப்புமிக்கதாக கொண்டாட தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் பல்கலைக்கழகம் செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.